 Registered as a Newspaper


# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 30 சனிக்கிழமை (12-06-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 196


(இணைப்பு விவகாரம்)

# கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடத்த தெரிவுக்குழு சிபார்சு!

## அதன் பின்னரே தீர்வுத் திட்டமாம்!

கொழும்பு, ஜூன் 12

தமிழர் பிரச்சினைக்குரிய தீர்வுத் திட்டம் ஒன்றை வகுப்பதற்கு முன்னர் வடக்கு—கிழக்கு இணைப்பு விவகாரத்துக்கு ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டும்.

அதற்காக வடக்குடன் கிழக்கு இணைந்திருப்பதை கிழக்கு மக்கள் விரும்புகிறார்களா என்பதனைக் கண்டறியும் பொருட்டு, கிழக்கிலங்கையில் சர்வசன வாக்கெடுப்பை நடத்த வேண்டும்.

இவ்வாறு மங்கள முனசிங்கா தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழு நேற்று முன்தினம் கூடி முடிவு செய்தது.

கிழக்கில் நான்கு மாதங்களுக்குள் சர்வசன வாக்கெடுப்பை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்றும் தெரிவுக்குழு ஒரு காலஎல்லையை நிர்ணயித்தது.

இந்த முடிவுகளுக்கு ஆளுங் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும், பிரதான எதிர்க் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்தி

[8 ஆம் பக்கம் பார்க்க]

## இந்தியப் படையை மீண்டும் அழைக்கும் திட்டம் இல்லை

### அரச தரப்பில் அமைச்சர் பதில்

இலங்கைக்கு மீண்டும் இந்தியப் படையை அழைக்கும் எண்ணம் அரசாங்கத்துக்குக் கிடையாது.

சுற்றுப்புறச் சூழல் மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் டாக்டர் விமல் விக்கிரமசிங்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சி எம்.பி.யான டாக்டர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே இது தொடர்பாக எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் முன்கண்டவாறு கூறினார். [உ-எ]

## அதிகாரப் பகிர்வு செய்க! புலிகளுடன் மீண்டும் பேசுக!!

### அனுரா வலியுறுத்துகிறார்

கொழும்பு, ஜூன் 12

★ இனப்பிரச்சினை தொடர்பாக மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சு நடத்தப்பட வேண்டும்.

★ இலங்கைத் தமிழ் மக்களுக்குரிய ஆட்சி அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்க பெரும்பான்மைச் சிங்கள மக்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.

சுதந்திரக்கட்சி எம்.பியும் அக்கட்சியின் தேசிய அமைப்பாளருமான அனுரா பண்டாரநாயக்கா பேட்டி ஒன்றில் இந்த இரு விடயங்களையும் வலியுறுத்தினார் என வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. (உ-எ)

## இளைஞர் அனைவருக்கும் ராணுவ பயிற்சி வழங்க முடிவு

### நாடாளுமன்றில் பிரேரணை

கொழும்பு, ஜூன் 12

பதினாறு வயதுக்கு மேற்பட்ட தகுந்த இனப்பற்றுள்ள இளைஞர்கள் அனைவருக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி அளிப்பதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரும் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கட்டாய இராணுவப் பயிற்சியில் ''கட்டாய'' என்ற வார்த்தையை அகற்ற வேண்டும் என அமைச்சர் ஏ. எச். எம். அஸ்வர் வலியுறுத்திக் கூறினார். நாடாளுமன்றம் அதனை ஏற்றுக்கொண்டது. அதனைத் தொடர்ந்து பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. (உ-எ-5)

## வீடுகள், விடுதிகளில் நபர்களை கைது செய்யும் பொலிஸாரின் விவரம் வெளியிட முடிவு

கொழும்பு, ஜூன் 12

கொழும்பில் விடுதிகள் மற்றும் வீடுகளில் தங்கியிருக்கும் நபர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் போது, எந்த பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த எந்த தரத்தில் உள்ள அதிகாரி அவர்களைக் கைது செய்தார் என்பதற்கான விவரம் வீட்டின் பிரதான குடியிருப்பாளர் அல்லது விடுதியின் உரிமையாளருக்கு எழுத்து வடிவில் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு முடிவுசெய்யப்பட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பீரங்கிப் படகு மீது தாக்கு!

யாழ்ப்பாணம், ஜூன் 12

மண்டைதீவின் கரையோரப் பகுதியில் தரித்துநின்று தமிழ் மக்களின் குடியிருப்புகள் மீது பீரங்கித் தாக்குதலை நடத்திய கடற்படையினரின் படகு ஒன்றை தமிழீழ துணைப் படையினர் தாக்கி விரட்டியடித்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் முற்பகல்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் - முஸ்லிம் கட்சிகள் எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 12

வடக்கு - கிழக்கு இணைப்புச் சம்பந்தமாக கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற தெரிவுக்குழுவின் முடிவுக்கு தமிழ், முஸ்லிம் கட்சிகள் பலத்த எதிர்ப்பும் கண்டனமும் தெரிவித்துள்ளன.

தெரிவுக்குழு இப்படி ஒரு முடிவுக்கு வந்திருப்பதாக அறிந்த உடனேயே அவை தமது எதிர்ப்பைத் தெரிவித்ததாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படுவதானால் வடக்கிலும் கிழக்கிலும் அதனை நடத்தவேண்டும் என்று ஈ. பி. ஆர். எல். எவ் பிரமுகர் திரு எல். கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தெரிவுக்குழுவின் இந்த முடிவு கேலிக் கூத்தானதாகும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அல்ஹாஜ் எம். எச். எம். அஷ்ரப் கண்டித்தார்.

அரசாங்கத்தைப் போன்று எதிர்க்கட்சிகளிடமும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு புதிய யோசனைகள், கருத்துக்கள் இல்லை என்பதனையே இந்த முடிவு எடுத்துக் காட்டுகிறது என்றும் அவர் சொன்னார். (அ-6)

## தமிழ்க்கட்சிகளின் பகிஷ்கரிப்பை கைவிடுமாறு சபாநாயகர் வற்புறுத்துவார்?

கொழும்பு, ஜூன் 12

தெரிவுக் குழுவைப் பகிஷ்கரித்து வரும் தமிழ், முஸ்லிம் கட்சிகளை, குழுவின் அமர்வுகளில் கலந்து கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கவும் தெரிவுக்குழு முடிவு செய்திருக்கிறது!

தெரிவுக் குழுவைப் பகிஷ்கரித்துவரும் தமிழ்க் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் இக் குழுவின் அமர்வுகளில் கலந்து கொள்ளும்படி அவற்றை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளும்படி சபாநாயகர் எம். எச். முஹம்மதுவை தெரிவுக்குழு கோரியுள்ளது!.

## கிளாலிக் கடலில் மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 12

கிளாலி கடற்பரப்பில் கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையே நேற்றிரவு 7.30 மணியளவில் கடும் மோதல் இடம்பெற்றது.

பயணிகள் படகுகள் நேற்றிரவு 7 மணிக்குப் பின் கிளாலிக் கரையில் இருந்து புறப்பட்ட சற்று நேரத்துக்கெல்லாம் பூநகரி பக்கமாக இருந்து கடற்படையினரின் நான்கு பீரங்கிப் படகுகள் பயணிகள் படகுகளை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தவாறு முன்னேற முயன்றன.

உடனடியாக கடற்புலிகள் கடற்படைப் படகுகளை நோக்கி முன்னேறிச் சென்று தாக்குதல் தொடுத்தனர். அதனையடுத்து கடற்பரப்பில் இரு தரப்பினரிடையேயும் கடும் மோதல் இடம்பெற்றது.

சுமார் ஒரு மணிநேரமாக இடம்பெற்ற மோதலை அடுத்து கடற்புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத படையினர் பின்வாங்கிச் சென்றனர்.

மோதல் இடம்பெற்றதால் பயணிகள் படகுச்சேவை ஸ்தம்பித்திருந்தது

நேற்றைய மோதலில் படையினர் தரப்பில் ஏற்பட்ட

(8 ஆம் பக்கம் பார்க்க)

### இன்றும் கிளாலி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 12

கிளாலி — பூநகரிப் படகுச் சேவை இன்று சனிக்கிழமை [illegible] நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## 'கடற் காற்று' நடவடிக்கை தொடர்ந்து நடக்கிறது

### மோதலில் இரு படையினர் பலி

கொழும்பு, ஜூன் 12

மட்டக்களப்பு - வாழைச்சேனைக்கு வடக்கே நேற்று முன்தினம் காலை ஆரம்பமான 'கடற்காற்று' (''முஹூது சுலங்'') இராணுவ நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இந்நடவடிக்கையின் போது ஏற்பட்ட மோதலில் படையினர் தரப்பில் இருவர் உயிரிழந்தனர் என்றும், சிப்பாய்கள் பலர் காயமடைந்தனர் என்றும் மட்டக்களப்பு மாவட்ட இராணுவ இணைப்பு அதிகாரி பிரிகேடியர் லக்கி அல்கம தெரிவித்தார்.

( 8 ஆம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மாட்டு வண்டிச் சவாரி

ஆவரங்கால் விவசாயிகள் நடத்தும் மாட்டு வண்டிச் சவாரி எதிர்வரும் 13-06-93 ஞாயிற்றுக்கிழமை பி. ப 2.00 மணிக்கு ஆவரங்கால் சவாரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டி அமைப்பாளர்
பொ. தட்சணாமூர்த்தி

(5954)

## அந்தோனியார் திருநாள்

தாளையடி

இன்று (12 - 06 - 1993) மாலை 6.30 மணிக்கு நற்கருணை வழிபாடும், நற்கருணைப் பவனியும், 13-06-1993 அன்று காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சுரூபப் பவனியும், சிறப்பு நிகழ்ச்சியாக மாலை 8.00 மணிக்கு ''அந்தோனியார்'' நாட்டுக் கூத்தும், கலை நிகழ்ச்சியும், நடன அரங்கேற்றமும் இடம் பெறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பங்குத் தந்தை, பங்கு மக்கள்.

(6253)

## அறிவித்தல்

பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்

இடம்பெயர்ந்த பாவனையாளர் நலன் கருதி உடுவில் உதவி அரசாங்க செயலர் பிரிவில் கே. கே. எஸ். றோட். இணுவில் கந்தசாமி கோவில் சந்திக்கண்மையில் ஓர் கிளை திறக்கப்பட்டுள்ளது. இக் கிளையில் கோப்பாய், உடுவில், நல்லூர் அரசாங்க செயலர் பிரிவில் உள்ள மக்கள் வைகாசி மாதத்திற்குரிய நிவாரணம் பெறலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

பொது முகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு

(இ-5312)

## அறிவித்தல்

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் இடம்பெயர்ந்த அங்கத்துவ சங்கங்களுடன் கலந்துரையாடல்.

இடம்: யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபம்.

காலம்: 13-06-1993ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2-00மணி.

இடம்பெயர்ந்த சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை தவறாது கலந்துரையாடலில் பங்கு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

- பதில் மாவட்டச் செயலாளர்.

யாழ். மா. சி. க. வ. கூ. ச. சமாசம்,
182 1/4, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

(சி.5251)

## நாளை

தென்மராட்சி, ஜூன் 12

சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய பரிசில் நாள் வைபவம் நாளை காலை 9-00 மணிக்கு வித்தியாலய அரங்கில் அதிபர் செல்வி இ. வீரசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவில் முதன்மை விருந்தினராக யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கமும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்விக் கோட்ட பிரதிப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரனும் கௌரவ விருந்தினராக தமிழீழ கல்விக் கழகத்தைச் சேர்ந்த வே. பாலகுமாரும் கலந்துகொள்வர்.

[உ117]

o o o

''பின்தங்கிய கிராமங்களில் கல்வியின் அவசியம்'' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று நாளை மாலை 6 மணிக்கு புத்தூர் கலைமதி மக்கள் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் க. கைலாசபதியின் 60 ஆவது பிறந்ததினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நினைவுக் கருத்தரங்கில் கவிஞர் இ. முருகையன், யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. இளையவன், திரு. சி. கா. செந்திவேல் ஆகியோர் கருத்துரை வழங்குவர். [உ-5)

## வியாழனில் தண்ணீர்

வாஷிங்டன், ஜூன் 12

வியாழன் கிரகத்தின் பத்தாவது துணைக் கோளின் மேற்பரப்பில் தண்ணீர் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கான முதலாவது ஆதாரத்தை கலிபோர்னியாவில் உள்ள நாஸா நிலைய ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளார்கள்.

சல்பர் டைஒக்ஸைட் அதிகம் கலந்துள்ள பனிக்கட்டிகள் அங்கே இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

## திருத்தம்

நேற்றைய உதயன் இரண்டாம் பக்கத்தில் வெளியான—

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க வாக்காளர் பட்டியல் 31 - 03 - 93 என்ற விளம்பரத்தில்—

நான்காவது வரியில்—

கிளை 18, 1க்குரியவை — நிவாரணக் கிளை 3 இலும் என்பதற்கு பதிலாக—

இளை 18, 11க்குரியவை — நிவாரணக் கிளை 3 இலும் — எனத் திருத்தி வாசிக்கவும்.

இணுவில் கந்தசாமி கோவில்
மகோற்சவகால

## தெய்வீக இசை அரங்கு

18 ஆம் நாள் உற்சவம்

காலம்: **12-6-93** (இன்று) நேரம்: இரவு **7-30** மணி

| | |
|---|---|
| பாட்டு | :- திரு. பொன். சுந்தரலிங்கம் |
| வயலின் | :- திரு. R. இராதாக்கிருஷ்ணன் |
| மிருதங்கம் | :- திரு. S. மகேந்திரன் |
| கெஞ்சிரா | :- திரு. S. துரைராசா |
| கடம் | :- திரு. V. தபோதநாயகம் |

— இளந் தொண்டர் சபையினர்

(5835)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் அப்பையா இராசநாயகம்

மலர்வு: 24 09 - 1924
உதிர்வு: 14 - 05 - 1993

நிகழும் ஸ்ரீமுக வருடம் வைகாசி மாதம் முதலாம் நாள் (14 - 5 - 1993) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வமாகிய அமரர் அப்பையா இராசநாயகம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 13 - 6 - 93 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தொடர்ந்து நடைபெறும் விசேட ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

— நன்றி —

மனைவி, மக்கள்.
மருமக்கள், சகோதரன்

(26073)

உ
சிவமயம்

## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுக வருடம் வைகாசி மாதம் 32ஆம் நாள் (14 - 06 - 1993) திங்கட்கிழமை கிருஸ்ணபட்ச தசமி திதியும் ரேவதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் பகல் 12-10 தொடக்கம் 1-30 வரையுள்ள
★ சுபமுகூர்த்த வேளையில் ★

| எமது கனிஷ்ட புத்திரன் | எமது ஏகபுத்திரி |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **கிரிதரன்** | **சிவபுரத்தரசி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

சட்டநாதர் வீதியிலுள்ள இளம் கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் நடைபெறும் திருமண வைபவத்துக்கு தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதிக்குமாறும் அதன் பின்னர் நடைபெறும் மதிய போசன விருந்தில் கலந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி. என். கே. பத்மநாதன்,
(நாதஸ்வர கானகலாநிதி)
199/4, கில்னர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

திருமதி. வே இரத்தினகோபால்,
(யாழ். கில்னர் மகாமாரி-
அம்மன் கோவில் ஆதீனகர்த்தா)
185/9, கில்னர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

★ இருவீட்டார் அழைப்பு ★

குறிப்பு: இதனையே தனிப்பட்ட அழைப்பிதழாகக் கொள்ளவும்.

(6254)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 17 — 01 — 1917



மறைவு: 13 — 05 — 1993

### அமரர் தம்பு கந்தையா

முருனிகன் திருவருள் கிடைத்துள்ள
முதியோ ராகிய தம்பர்தம்
அருளுயர் சுதனாம் கந்தையா
அமர ராகினர் அவன்விதியால்
இவரது நினைவை கூருகின்றா
இதமார் துணைவி நல்மக்கள்
அவனருள் வேண்டித் துதிக்கின்றார்
அன்பர் ஆத்மா சாந்திபெற

குடும்பத்தினர்

29/13, உடையார் ஒழுங்கை,
பொற்பதி வீதி,
கொக்குவில்.

(26071)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதி பெறாத

# மருந்து வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்க முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 12

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் அனுமதியின்றி வியாபாரம் செய்யும் மருந்து விற்பனையாளர்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பொ. இரட்ணசபாபதி தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் உள்ள மருந்தகங்கள் பலவற்றில் தரக்குறைவான — காலாவதியான மருந்து வகைகள் விற்கப்பட்டு வருவதாகவும் —

பயிற்சி பெறாத மருந்தாளர்கள் கடமை புரிவதால் டாக்டர்களால்எழுதிக்கொடுக்கப்படும் மருந்துகளிற்குப் பதிலாக வேறு மருந்துகள் விநியோகிக்கப்படுவதாக பல புகார்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும்—

இதனை அடுத்தே பணிப்பாளர் இந் நடவடிக்கையை எடுக்க உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது (ஓ-162)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1992/93 கல்வியாண்டிற்கு பின்வரும் கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாக பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

1. வர்த்தக முதற் கற்கை நெறி
2. கலை முதற் கற்கை நெறி
3. பொதுக்கலைமாணி — பகுதி-1
4. சிறப்புக் கலைமாணி — பகுதி - 1
5. வர்த்தகமாணி பகுதி - 1

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக் கலைமாணி கற்கை நெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம். (இந்து நாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், மெய்யியல் அரசறிவியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம்).

விண்ணப்பப் படிவங்களும், உரிய விவரங்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வெளிநிலைப் பதிவு தேர்வு அலுவலகத்தில் இருந்து நேரடியாகவோ, தபால் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவத்தையும், பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாக பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிறாப்பரிடம் 50/- ரூபா செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தையும், பாடத்திட்டத்தின் பிரதியையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிதியாளருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளை/ தபாற்கட்டளையுடன் சுய முகவரியிட்டு ரூபா 12/- பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28x20 ச. மீ. அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

1991/92 கல்வியாண்டிற்காக ஏற்கனவே பதிவு செய்துள்ளோருக்கு இவ்வறிவித்தல் ஏற்புடையதல்ல.

முடிவு திகதி:
16. ஜூலை. 1993.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப் — பல்கலைக்கழகம்.
11-06-1993

(இ-5234)

## பாஸ்கரலிங்கத்தின் பதவிக்கு முடிவு காலம்?

கொழும்பு, ஜூன் 12

திறைசேரியில் உள்ள மிக உயர்நிலை அதிகாரி ஒருவரின் பதவிக்காலத்தை முடிவுக்குக் கொண்டு வருவது நெருங்கிக் கொண்டிருப்பதாக ''சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் இந்த உயர்நிலை திறைசேரி அதிகாரி, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை குறித்து அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் பேச்சுகள் நடத்திக்கொண்டிருந்த போது, அவரின் கொழும்பு வாசஸ்தலத்தை, சட்டத்தை அமுல் நடத்தும் அதிகாரிகள் சோதனை இட்டனர்

அவரது மனைவி இதனை வாஷிங்டனில் உள்ள கணவருக்கு தெரியப்படுத்த அங்கிருந்து அவர் கொழும்பில் இருந்த அதிகாரத் தலைமையுடன் தொடர்பு கொண்டார்.

ஏன் இப்படி என்னைத் துன்புறுத்துகின்றீர்கள் என்று அவர் அதிகாரத் தலைமையைக்கேட்டார். அதற்கு அதிகாரத்தலைமை, தவறுதலாக வீடு சோதனையிடப்பட்டதாக அவரிடம் தெரிவித்தது.

இப்போது மீண்டும் அந்த திறைசேரி உயர் அதிகாரிக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் அவரது பதவிக்காலத்துக்கு முடிவு நெருங்கிவருவதாகவும் ''சண்டே ரைம்ஸ்'' ஊகம் தெரிவித்துள்ளது.

அண்மையில் வெளிநாடு சென்றிருந்த பிரஸ்தாப திறைசேரி உயர் அதிகாரி நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளரும், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் மிக நெருக்கமானவருமான திரு. பாஸ்கரலிங்கம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (த-எ)

கடந்த நவம்பர் 15க்குப் பின்னர்

## ஓய்வூதியம் பெற்றோருக்கு சலுகைகள் கிடைக்கும்

கொழும்பு, ஜூன் 12

கடந்த ஆண்டு நவம்பர் 15ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னரும் ஓய்வூதியம் பெற்றவர்களுக்கும், ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்கப்படும் சலுகைகள் கிடைக்கும் என்று அறிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு நிறைவேற்றப்பட்ட பின்னர் கிடைக்கும் நன்மைகளை இவர்களும் பெறுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது சம்பந்தமான சுற்று நிருபம் ஒன்றை பொதுநிர்வாக அமைச்சு அனுப்பியுள்ளது. (த-எ)

## தீவுப் பகுதி தபால்கள் இம்முறை வரவில்லை

### வேலணைக்கு மட்டுமே வந்தன

யாழ்ப்பாணம், ஜூன் 12

ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, காரைநகர் ஆகிய தபாலகங்களுக்குரிய தபால் பொதிகள் எதுவும் இம்முறை இங்கு எடுத்துவரப்படவில்லை என யாழ் பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

''குமாரி'' கப்பல் மூலம் வந்து சேர்ந்த 700 தபால் பொதிகளில் வேலணை தபாலகத்துக்குரிய பொதிகள் மட்டும் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மூன்று மாதங்களாக தீவுப் பகுதிக்குரிய தபால் பொதிகள் இங்கு அனுப்பப்படவில்லை என்றும்-

அவற்றை இங்கு அனுப்பி வைக்குமாறு வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் திணைக்களம் கொழும்பு பிரதம தபாலகத்திற்குப் பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஓ-5-17]

### பொங்கல்விழா

தெல்லிப்பழை, ஜூன் 12

கீரிமலை கருகம்பனை கவுணாவத்தை வைரவர் கோவில் பொங்கல் வேள்வி விழா இன்று அதிகாலை பிரான்பற்று சந்திக்கு அருகாமையில் நடைபெறவிருக்கிறது. (அ-68)

### 'வெளிச்சம்' வெளி வந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 12

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் கலை இலக்கிய மாத இதழான 'வெளிச்சம்' சஞ்சிகையின் ஜூன் மாத இதழ் வெளி வந்துள்ளது. (இ-5)

### சுக வாழ்வு விரிவுரை

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கிவரும் ''சுகவாழ்வு'' பொதுவிரிவுரைத் தொடரின் 11ஆவது அமர்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் 12மணி வரை கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் வி. தர்மரத்தினம் தலைமையில் கீழ் இடம்பெறவுள்ள 11 ஆவது அமர்விலே, பாதுகாப்போம் பல், ஈறு, வாய், எனும் தலைப்பில் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி எம் சுப்பிரமணியம் அவர்களும் சுகநலம் பேணல் கண், காது. மூக்கு, தொண்டை எனும் தலைப்பில் வைத்திய கலாநிதி எம் [illegible] அவர்களும் விரிவுரைகளை வழங்கவுள்ளார்கள். [க]

ஸ்ரீலங்கா இராணுவத்தின்

## கொமாண்டோ அணியை பலப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 12

ஸ்ரீலங்கா, இராணுவத்தின் கொமாண்டோ அணியைப் பலப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனையடுத்து கொமாண்டோ அணிக்கு மேலும் படையினர் சேர்த்து கொள்ளப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 18 ஆம் திகதி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-எ)


தாவடி · நெல்லொருபதி

அருள்மிகு விநாயகர் ஆலய

மஹோற்சவ கால பேருரைகள்

நிகழ்த்துபவர்: திரு. த. சிவகுமாரன் அவர்கள் (ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, அமைப்பாளர் காரைநகர் கம்பன் கழகம்)

காலம்: 14 - 06 - 1993 திங்கள் முதல் 23 - 06 - 1993 புதன் வரை (10 தினங்கள்)

நேரம்: தினமும் இரவு 8-45 — 9-45 மணி வரை

| காலம் | | பொருள் |
|---|---|---|
| 14—06-1993 | — | களிற்று மாமுகன் |
| 15—06—1993 | — | மெய்விடா வீரன் கைவேல் |
| 16—06—1993 | — | பெருமையால் தம்மை ஒப்பார் |
| 17—06—1993 | — | தோப்பாகும் தனிமரங்கள்-1 |
| 18—06—1993 | — | தோப்பாகும் தனிமரங்கள்-2 |
| 19—06—1993 | — | நடையில் நின்றுயர் நாயகன் |
| 20—06—1993 | — | செந்தமிழ்ச் செல்வி |
| 21—06—1993 | — | பொய்யா மொழி |
| 22—06—1993 | — | சிலம்பில் வென்ற சேயிழையாள் |
| 23—06—1993 | — | பெண்களில் தோன்றிய எம் பிராட்டி |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— தேவஸ்தான நிர்வாக சபை.

அன்பளிப்பு:
மக்மிலன் புத்தகசாலை,
இல. 3, பஸ் நிலையம்:
யாழ்ப்பாணம்.

(சி-5247)


## முக்கிய அறிவித்தல்

யாழ். மாவட்டத்தில் மென்பானம், இனிப்பு வகை, ஜாம் ஆகியவற்றை தயாரித்து சந்தைப்படுத்துவதில் ஈடுபட்டிருக்கும் சகல உற்பத்தியாளர்களையும் இம்மாதம் 17ஆம் திகதிக்கு முன்பாக இல. 230, இராமநாதன் வீதியில் (பல்கலைக்கழகத்திற்கு அருகில்) அமைந்துள்ள தொழில் துறை மேம்பாட்டு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

— தொழில்துறை மேம்பாட்டு நிறுவனம்.

(இ-5248)


Computer Programming in BASIC Language

4 MONTHS

சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆரம்பம்: 19 - 06 - 1993
8-30 மணி

Lectures By: S. P. Sivapathasundaram
M. I D. P. M. (Lond.)

★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்
★ கட்டணம் மாதம் ரூ 400/- மட்டுமே

C. I. M. A, I. A. B LOTUS 1—2—3
SHORT - HAND & TYPING
நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Pioneers in Computer Education)
16, 3rd. CROSS STREET, JAFFNA.

(சி-5250)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிந்திய திருச்சபையின் புதிய பே

12 – 06 – 19

## வாழ்த்துச் செய்திகள்

### நிறைவான ஆசி பொழியட்டும்

தென் இந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீனத்தின் புதிய பேராயராக இறைவன் அருளால் அதிவண. சுப்பிரமணியம் ஜெபநேசன் முறையான ஒழுங்குகளின்படி நியமிக்கப்பட்டு திருநிலைப்படுத்தப்பட்டதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

அவர் இம் மாதம் 12 ஆம் திகதி வட்டுக்கோட்டை ஆசன ஆலயத்தில் பேராயர் இருக்கையில் அமர்ந்து, ஆராதனைக் கூடாக தனது ஆதினப் பொறுப்புகளை ஏற்றுக் கொள்வார். இறைவன் தனது தூய ஆவியின் நிறைவை அவருக்குத் தொடர்ந்து கட்டளையருளி ஆசிர்வதிக்க வேண்டுமென்று வேண்டி நிற்கிறோம்.

ஒரு பேராயர், ஆண்டவர் இயேசுவின் பணியாளனாகவும், ஒரு தீர்க்கதரிசியாகவும், ஆசாரியனாகவும், ஆளுகை செய்பவனாகவும் கடமை புரிய அமர்த்தப்படுகிறார், இம் மகத்துவமான பொறுப்புகளை ஆண்டவர் ஒரு பாடு அனுபவித்த தாசனாகவே நிறைவேற்றினார் என்றால் அவர் அடியில் தொடர்ந்து இப் பணியில் இறங்குபவர்கள் பாடு அனுபவிக்கும் இயல்புள்ளவர்களாகவே இறங்க வேண்டும். பேராயர் ஜெபநேசன் தனது தியாகம், ஒப்படைப்பு, அர்ப்பணத்திற் கூடாக, இறைவன் அருளால் இப் பெரும் பொறுப்பை, திறமையாக நிறைவேற்றுவார் என்பது எங்கள் நம்பிக்கை.

பேராயர் என்பவர் திருச்சபைக்குள்ளேயே முக்கிய பொறுப்புக்களை உடையவர் என்பது தெளிவு. எனினும் திருச்சபை உலகத்தின் மத்தியில் அமர்த்தப்பட்டு, உண்மையை நிலைநாட்டவும் நீதியை நடப்பிக்கவும், அன்பின் பணிகளை நிறைவேற்றவும், சமாதானத்திற்காக உழைக்கவும் செயல்பட அனுப்பப்படுகிறது. திருச்சபையை இவ்வழியில் இறங்கி உலகத்திற்குள் இருக்கும் உத்தரவாதங்களை நிறைவேற்ற ஊக்கப்படுத்துவது பேராயரின் ஓர் உத்தம பொறுப்பாகும். இதையும் பேராயர் ஜெபநேசன் நிறைவேற்ற இறைவன் தனது ஆவியின் வழிநடத்தலையும், வல்லமையையும் நிறைவாய்க் கட்டளையிடுவார் என்பதே எங்கள் பிரார்த்தனை.

''நானும் என் வீட்டாருமோ கர்த்தரையே சேவிப்போம்'' என்று யோசுவா கூறினது போல் பேராயர் ஜெபநேசனும் அவரது துணைவியாரும், குடும்பமும் தீர்மானித்து தங்களை இறைவனின் கருவிகளாக அர்ப்பணம் செய்திருக்கிறார்கள் என்பதற்காக இறைனுக்கே நன்றி கூறுகின்றோம். இறைவன் தனது நிறைவான ஆசிகளை அவர்கள் மேல் பொழிந்தருளுவாராக

டி. ஜே. அம்பலவாணர்,
யாழ். ஆதீனம்-
தென் இந்திய திருச்சபை.

### குறுகிய காலத்தில் உயர்வு

தென் இந்தியத் திருச்சபையை வழிநடத்த புதிய ஆயராக வண. ஜெபநேசன் அவர்கள் தேர்ந்து கொள்ளப்பட்டதையிட்டு மனமகிழ்வடைகின்றோம் குறுகிய காலங்களில் இவருக்குக் கிடைத்துள்ள உயரிய அழைப்புக்கள், இறைவன் இவரை உன்னத நிலைக்கு அழைத்துச் செல்லும் வெளிப்பாடாக அமைகின்றன. இவரது சாந்த குணமும், ஆடம்பரமில்லா, அடக்கமான எளிமை வாழ்வும இவரது அழைப்பின் அச்சாணியாகவும், எமது காலத்துக்குகந்த பணியாற்ற சாலச் சிறந்த குணங்களாகவும் அமைகின்றன. இவற்றுடன் இவரது மதிநுட்பமும், இறைவனின் ஞானமும் இணைந்து நற்பணி ஆற்ற இறையாசி வேண்டி நிற்கின்றோம்.

யாழ். ஆயர்
வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை

### யாவரையும் கவரும் பேச்சு

அருளோங்கும் மெய்யன்பர்களே!

ஆயர், ஆண்டகை அருட் திரு ஜெபநேசன் அவர்களைத் திருநிலைப் படுத்தும ஆராதனை விழா நிகழவிருப்பதறிந்து பெரிதும் மகிழ்வுறுகிறோம். உண்மையில் சமயப் பெரியார்களைப் போற்றுவதும், பாராட்டுவதும் ஆண்டவன் வழிபாட்டுக்கொப்பாகும் மேலும், அவரின் ஆசிகளை நேரில் பெறுவது எல்லோருக்கும் வாய்ப்பதொன்றன்று. ஆராதனையின் போது அவர்களின் முகப் பொலிவும் தேஜஸ்சும் கண்டுணர் வார்க்கே தேற்றம், இதனை அனுபவ ரீதியில் கண்டுணர்ந்த உண்மை. ஆயர் அவர்களின் அன்பு ததும்பும் உபசரிப்பும், பேச்சும் யாவரையும் கவர்ந்து ஈர்ப்பன. இவ்விழாவில் பங்குகொள்ளும் அன்பர்கள் அனைவரையும் பாராட்டுகிறோம். இவ் விழாசிறப்புற நிறைவுற ஆண்டவன் திருவருள் வேண்டி எல்லோருககும் எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு
- ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்.

### தெளிவான சிந்தனையாளர்

தென்னிந்திய திருச்சபைகளின் 3ஆவது பேராயராக திருநிலைப் படுத்தப்பட்ட அதி மேதகு கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள் இன்று (12-06 93) பதவி ஏற்கின்றார். தலை சிறந்த ஆளுமையும், தகைமையும் பெற்ற அதிமேதகு பேராயர் டி. ஜே. அம்பலவாணர் அவர்களின் இடத்தினை இன்று அவர் ஏற்றுக் கொள்கின்றார். சென்னையில் திருநிலைப் படுத்தப்பட்ட பேராயர் அவர்கள் தென்னிந்தியத் திருச்சபைகளின் தலைமை நிலையமான வட்டுக்கோட்டையில் பதவியேற்றுக் கொள்கின்றார்.

இறைபணிக்கு தம்மை அர்ப்பணித்த புகழ் பூத்த குடும்பத்தில் தோன்றிய அதிமேதகு பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள் ஒரு சிறந்த கல்விமான், ஆரம்பத்தில் ஆசிரியராகவும் தொடர்ந்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் உப அதிபராகவும், அதிபராகவும் கல்விப்பணி செய்த இவர், இன்று திருச்சபைகளின் உயர் இடத்தினை பொறுப்பேற்கின்றார்.

நெருக்கடியான இந்தக் காலகட்டத்தில் மக்கள் படுகின்ற துன்பங்களுக்கு மத்தியில் பொறுப்பேற்கும் பேராயரிடமிருந்து சமூகம் பெரும் அளவில் எதிர்பார்க்கும் என்பது நிச்சயம். தெளிவான சிந்தனையும், கருத்தாழமும் மிக்க செயல்களையும் ஆற்றிய பேராயர் அவர்கள் இச் சவால்களை இலகுவில் கையாளுவார் என்பது எனது நம்பிக்கை. அவரது சேவைகள் சிறக்க ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கா. மாணிக்கவாசகர்,
அரச அதிபரும், மாவட்ட ஆணையாளரும்,
யாழ்ப்பாண மாவட்டம்.

## புதிய பேராயர் ஜெபநேச

## மதப்பற்றும், தமிழ்ப் ப

தென் இந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீனத்தின் மூன்றாவது பேராயராக பேரருட் திரு கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் அவர்கள் மதுரையிலுள்ள புனித. ஜோர்ஜியஸ் ஆசன ஆலயத்தில் கடந்த மே மாதம் முப்பதாம் நாள் திருநிலைப்படுத்தப்பட்டார்.

தென் இந்தியத் திருச்சபை 1947ஆம் ஆண்டு தென் இந்தியாவிலுள்ள திருச்சபைகள் ஒன்றிணைந்து உருவாகியது. 1816ஆம் ஆண்டில் வண. கலாநிதி டானியல் பூவர் அவர்களை முன்னோடியாகக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்ட அமெரிக்க - இலங்கை மிஷனும் தென்- இந்தியத் திருச்சபையின் ஓர் ஆதீனமாகவும் இணைந்துகொண்டது. தற்போது 21 ஆதீனங்களையும் 21 பேராயர்களையும் கொண்டுள்ள தென்னிந்திய திருச்சபையில் 21 பேராயர்களுள் ஒருவராக தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாணப் பேராயத்தின் மூன்றாவது பேராயர் பேரருட் திரு. கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் அவர்கள் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளார்.

தென் இந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாணப் பேராயத்தின் முதலாவது ஆயராக பேரருட் திரு. கலாநிதி சபாபதி குலேந்திரன் அவர்கள் தென்னிந்தியத் திருச்சபை உருவாக்கப்பட்ட 1947ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ஆம் நாள் சென்னை புனித ஜோர்ஜியஸ் ஆசன ஆலயத்தில் திருநிலைப்படுத்தப்பட்டார். இரண்டாவது பேராயராக பேரருட் திரு. டேவிட் ஜெயரட்ணம் அம்பலவாணர் அவர்கள் 1971 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் நாள் திருநிலைப்படுத்தப்பட்டார் 22 ஆண்டு காலம் நற்பணி ஆற்றி கடந்த பெப்ரவரி மாதம் 28 ஆம் நாள் ஓய்வு பெற்ற பேராயர் அவர்களின் இடத்திற்கு மூன்றாவது பேராயராக 53 வயது நிரம்பிய புதிய ஆயர் பேரருட் திரு கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் அவர்கள் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளார்.

ஆயர் வண. கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் அவர்கள் 1940 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் நாள் சாவகச்சேரியில் வண. சுப்பிரமணியம் தம்பதிகளுக்கு இரண்டாவது புதல்வனாகப் பிறந்தார். வண. சுப்பிரமணியம் அவர்கள் அமெரிக்க மிஷன் பாடசாலைகள் பலவற்றில் தலைமை ஆசிரியராகவும் பின் யாழ்ப்பாண ஆதீனத்தின் மிகச் சிறந்த ஊழியராகவும் தேவபணியாற்றி இன்று அவுஸ்திரேலியாவிலுள்ள மெல்போர்ன் நகரத்தில் வசிக்கின்றார். ஆயர் அவர்களின் சகோதரர்களான வண. சுகுணானந்தன் வண. மனோபவன், பொறியியலாளர் சுகுமார், திருமதி சாந்தா ஜெகநாதன் ஆகியோர் அவுஸ்திரேலியாவில் வசிக்கின்றனர். இவரின் சகோதரனாகிய டாக்டர் ஜெயசீலன் காலமாகி விட்டார்.

ஆயர் வண. கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் அவர்கள் தமது ஆரம்பக் கல்வியை சாவகச்சேரியில் உள்ள டிறிபேர்க் கல்லூரியில் பயின்றார். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் தனது உயர்கல்வியைக் கற்று பேராதனை பல்கலைக்கழகத்திற்குச் சென்றார், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ், வரலாறு, பொருளியல் ஆகிய பாடங்களைப் பயின்று 1962இல் கலைமாணியாக வெளியேறினார். கண்டியில் உள்ள கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரியில் ஆசிரியராக இணைந்து திறமைமிக்க ஆசிரியராகவும், விடுதி மேற்பார்வையாளராகவும், 1968ஆம் ஆண்டு வரை அதிபர் வண, D. I. றொபின்சன் காலத்தில் பணியாற்றினார்.


1968ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். புனித அந்தோனியார் கல்லூரியில் ஏழு வருடங்கள் சேவையாற்றிய பின் 1969ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியராக அன்றைய யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர், திரு. இராஜன் கதிர்காமர் காலத்தில் இணைந்து கொண்டார். 1986இல் யாழ்ப்பாணக் கல்லூரி உப அதிபர்களில் ஒருவராகவும், 1988இல் யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வராகவும் நியமிக்கப்பட்டார்.

தமிழ் மக்களின் உயர் கல்வியில் அதிக நாட்டமுள்ள ஆயர் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவையின் உறுப்பினர்களில் ஒருவராகவும் பணியாற்றுகின்றார்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் இன்றைய முதல்வராகவும் கடமையாற்றும் ஆயர் வண கலாநிதி ஜெபநேசன் அவர்கள் தமிழ்நாடு இறையியற் கல்லூரியிலும் பங்களூர் இறையியற் கல்லூரியிலும் தனது இறை கல்வியைக் கற்று தத்துவம்,சமயத்தில் மதுரைப் பல்கலைக்கழக முதுமாணிப் பட்டத்தையும், செரம்பூர் பல்கலைக்கழகத்தில் B.D. பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். பேராதனை பல்கலைக்கழகத்தில் முதுகலை மாணிப் பட்டத்தையும், 1987ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

#### தமிழ், ஆங்கிலத்தில் புலமை

சிறந்த கல்விமானான ஆயர் வண. கலாநிதி ஜெபநேசன் அவர்கள் தமிழ். ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஆழ்ந்த புலமை மிக்கவர். பல நூல்களையும், கட்டுரைகளையும், வாழ்க்கைக் குறிப்புக்களையும், தமிழ், ஆங்



பேராயர் அதிவண. சுப்பிரமணியம் ஜெபநேசன் அவர்கள் கடந்த 30ஆம் திகதி சென்னையில் தென்னிந்திய திருச்சபையின் மூன்றாவது பேராயராக அருட்பொழிவு பெற்ற பின்னர் எடுக்கப்பட்ட படம்.

இடமிருந்து வலமாக திருமதி சந்திரா அம்பலவாணர், திருமதி விமலா ஜெபநேசன், புதிய ஆயர் அதிவண. ஜெபநேசன், அதிவண. டி. ஜே. அம்பலவாணர் ஆகியோர் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராயர் பதவி அமர்வு விழாச் சிறப்பிதழ்

6 – 1993

# நேசன் சிறந்த கல்விமான்

# புலமையும் நிரம்பியவர்

கிலம் ஆகிய மொழிகளில் தார். எழுதி வெளியிட்டுள்ளார். ஆயர் அவர்களின் துணைவி இவ்வருட ஆரம்பத்தில் தென் யார் திருமதி விமலா ஜெப



பேராயர். அதிவண.
சுப்பிரமணியம் ஜெபநேசன் ஆண்டகை
அவர்கள்

னிந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீனத்தின் முதலாவது பேராயராக விளங்கிய 1992இல் மறைந்த பேராயர் கலாநிதி சபாபதி குலேந்திரன் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பை எழுதி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது மதப்பற்றும் தமிழ்ப் பற்றும் நிரம்பிய அவர் மக்கள் தொண்டு செய்வதிலும் ஆர்வமாக உழைத்து வந்

நேசன் அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியில் மேல்நாட்டு இசை ஆசிரியராக சேவை யாற்றுகின்றார் மேல்நாட்டு இசையில் உயர்தராதரத்தைப்பெற்ற சிறந்த ஆசிரியராக யாழ்ப்பாணத்தில் இவர் சேவையாற்றுவது குறிப்பிடத்தக்கது. ஆயர் அவர்களின் புதல்விகள் செல்வி நிர்மலின், செல்வி கீதாஞ்சலி ஆகியோர் கோடைக்கானல் அமெரிக்க கல்லூரியில் கல்வி பயில்கின்றனர்

பேராயரின் குடும்ப உறவினர்களில் பெரும்பாலானோர் தற்போது வெளிநாடுகளில் வசித்து வருகின்றபோதிலும் பேராயர் இந்த மண்ணிலேயே நிலைத்திருந்து இந்த மண்ணின் மக்களின் கல்வித்துறையிலும் மதத்துறையிலும் மற்றும் பல துறைகளிலும் பெரும் பணியாற்றி வருகிறார்.

தென்னிந்தியத் திருச்சபையின் ஆயர்களுள் ஒருவராக திருநிலைப்படுத்தப்பட்ட பேராயர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் அவர்களை தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண பேராயத்தின் 3 ஆவது பேராயராக பதவியமர்த்தும் வைபவம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வட்டுக்கோட்டையில் உள்ள தென்னிந்திய திருச்சபை ஆசன ஆலயத்தில் நடைபெறுகின்றது. வட்டுக்கோட்டை ஆசன ஆலயமானது. இற்றைக்கு 367 ஆண்டுகளுக்கு முன்னர் 1626இல் போர்த்துக்கேயரால் கட்டப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

★

## மூன்றாவது பேராயர்

அதிவண. கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் (B.A., Dip - in - Ed, M.A., B. D., Ph. D.) அவர்கள் மே மாதம் 30 ஆம் திகதி சென்னையில் தென்னிந்தியத் திருச்சபை யாழ் அத்தியட்சாதீனத்தின் பேராயராக அருட்பொழிவு பெற்றார்.

தென்னிந்தியத் திருச்சபை யாழ். அத்தியட்சாதீனத்தின் மூன்றாவது பேராயர் இவர் ஆவார்.

முதலாவது பேராயர் காலஞ்சென்ற அதி.வண. சபாபதி குலேந்திரன் ஆவார்.

அவருக்குப் பின் பேராயர் பதவிக்கு வந்த அதி. வண. டேவிட் ஜெயரட்ணம் ஓய்வு பெற்றதை அடுத்து புதிய பேராயர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் தற்போது பதவி ஏற்றுள்ளார்.

இன்று 3-00 மணிக்கு வட்டுக்கோட்டை பேராலயத்தில் புதிய பேராயருக்கான பதவி அமர்வு நிகழ்வு வழிபாடு அதி. வண. டேவிட் ஜெயரட்ணம் தலைமையில் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணக் கல்லூரி வளாகத்தில் வரவேற்பு நிகழ்வு இடம்பெற உள்ளது.

## நற்பணியில் முதல்வர்

தென்னிந்திய திருச்சபையின் புதிய யாழ். அத்தியட்சகர் அதிவணக்கத்துக்குரிய கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்களைத் திருநிலைப்படுத்தும் இத்திருநாளில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை உறுப்பினர், தொண்டர்கள், ஊழியர்கள், மாணவர்கள் அனைவரும் தங்கள் இதய பூர்வ ஆசிகளை அத்தியட்சகர் அவர்களுக்கு இத்தால் சமர்ப்பிப்பதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றோம்.

கஷ்டங்கள் நிறைந்த இவ் உலகில் நாம் மனிதநேயத்துடன் யாவருக்கும் தொண்டு செய்ய வேண்டும் என்ற நன்னெறியுடன் செயற்படும் செஞ்சிலுவைச் சங்கம் அத்தியட்சகர் அவர்கள் துயர் துடைக்கும் நற்பணியான ஆன்ம ஈடேற்றத்துக்கு இட்டுச் செல்லும் பணியினை மேற்கொண்டு சிறந்த சேவை செய்ய எல்லா ஆசிகளையும் அன்னார்க்கு நல்கும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

தென்னிந்திய திருச்சபையின் யாழ் ஆதீனம் அத்தியட்சகரின் ஆழ்மையின் கீழ் மேலும், மேலும் வளர்ந்து பல்கிப் பெருகி நம் நாட்டுக்கும் எம் மக்களுக்கும் நன்மை பயக்க வேண்டுமென வாழ்த்துக் கூறுகிறோம்.

கு. பாலகிருஷ்ணன்,
உபதலைவர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை.

## ஆற்றுக நற் சேவையினை!

நித்தமுங் கல்வி கற்று,
நிகரிலாப் புலமை பெற்று;
வித்தகங் காட்டி வெல்லும்
வினைஞனாய்த் திகழுகின்ற
சித்தமே! உனது பேரைச்
''செபநேசன்'' என்று நல்லோர்,
சத்தமாய்ச் சொல்லி நிற்கும்,
சரித்திரம் படைத்து விட்டாய்!

துறைபல கற்று நீயும்,
தூயநற் தொண்டனாகி;
இறைபணி ஆற்ற வந்த
இணையிலா ''ஆயர்'' என்னும்,
நிறைவினைப் பெற்று மண்ணில்
நிகரிலாச் சேவை செய்ய,
முறையுடன் உன்னை இன்று
முழுமையாய் வாழ்த்துகின்றோம்!!

ஜெ. ஜெயசீலன்

(விளம்பர இல. சி/5252)

# வாழ்த்துச் செய்திகள்

## கல்விமான், நற்பண்பாளர்

தென்னிந்திய திருச்சபையின் யாழ் அத்தியட்சாதீனத்தின் புதிய ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டுள்ள அதிவணக்கத்திற்குரிய கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்களை, யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் Jaffna Christian Union) சார்பில் தாழ்மையுடனும் மிகுந்த அன்புடனும் பாராட்டி, மனமார வாழ்த்துவதிலும், மகிழ்வுடன் வரவேற்பதிலும் பெருவுவகையடைகிறேன். அவர் சீரிய கிறிஸ்தவ குடும்பத்திலே தோன்றிய உண்மையான பக்திமான், சிறந்த கல்விமான், நற்பண்பாளன் என்பதை நாம அறிவோம்.

இப்படியான சான்றோனைப் புதிய பேராயராகப் பெற்றது, தென்னிந்திய திருச்சபையின் யாழ் பேராயம் பெற்ற பெரிய பேறாகும் மறைந்த பேராயர் அதிவண சபாபதி குலேந்திரன், இளைப்பாறிய பேராயர் அதிவண. டி. ஜே. அம்பலவாணர் வழியில் கிறிஸ்தவ ஐக்கியத்திற்கும், ஒருமைப்பாட்டிற்கும் தொடர்ந்து அயராது உழைப்பார் என்று முழுமையாக நம்புகிறோம் தமிழ் மக்களின் இன்றைய இக்கட்டான கால கட்டத்திற்குத் தேவை செயல் வீரரே. அன்னாரது சேவைக்காலம் கிறிஸ்தவ சபைகளுக்கும், முழு சமுகத்திற்கும் மிகப் பலனுள்ளதாகவும் ஆசீர்வாதமாகவும் அமைய இறை ஆசி வேண்டுகிறோம்.

டாக்டர் ரி. டபிள்யூ ஜெயகுலராஜா,
தலைவர், யாழ் கிறிஸ்தவ ஒன்றியம்

## நல்ல மேய்ப்பனின் வழியில்

இலங்கைப் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரீகப் பகுதி மாணவர் ஆசிரியர் சார்பில் அதிவணக்கத்துக்குரிய கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள் தென்னிந்தியச் திருச்சபையின் புதிய பேராயராக நியமிக்கப்பட்டதற்கு என்னுடைய வாழ்த்துதலைத் தெரிவிப்பதில் சந்தோஷப்படுகிறேன். எமது கிறிஸ்தவ நாகரீகப் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் அதனோடு தொடர்புடையவராக அவர் இருந்தார் எமது கிறிஸ்தவ நாகரீக துறை அவருடைய ஆலோசனையாலும் ஆதரவினாலும், வழிநடத்தலினாலும் நன்மை அடைந்திருக்கிறது

அதி வணக்கத்துக்குரிய கலாநிதி ஜெபநேசன் புதிய ஆயர் பதவி சேவையில் மிகச் சிறந்த அறிவையும், நிர்வாக அனுபவத்தையும் ஆவியின் உந்துதலையும் அடக்கியுள்ளார். அவர் ஓர் சிறந்த அறிஞன். கல்விமான், பிரசங்கி, விரிவுரையாளன், சபைஊழியன். இந்த ஆவியின் ஏவுதலால் கலாநிதி ஜெபநேசன் தன்னுடைய சமுதாயத்தில் கடவுளை தரிசித்து சேவை செய்ய முற்பட்டுள்ளார். அவர் தமது ஊழியத்தில் கடவுளுடைய வார்த்தையை நன்றாகக் கேட்டு தீர்க்கதரிசன எதிர்பார்ப்புடன் கடவுளுடைய சித்தத்தை நிறைவேற்றுவார் என நம்புகிறேன்.

புதிய பேராயர் எமது தமிழ்ப் பாரம்பரியத்தின் கலாசார சமூக, சமய ஊற்றுக்களை நன்றாக ஆராய்ந்து செயற்படுத்தக் கூடியவர். இயேசுக் கிறிஸ்துவாகிய நல்ல மேய்ப்பனின் அடிச் சுவடுகளைப் பின்பற்றி தென்னிந்திய திருச்சபையை கடவுளுடைய இராச்சியத்தை நிலைநாட்டும் ஓர் சிறந்த கருவியாக அவர் மாற்றுவார் என்பது எங்களுடைய நம்பிக்கை.

வண. கலாநிதி ஏ. ஜே. வி. சந்திரகாந்தன்
தலைவர்- கிறிஸ்தவ நாகரீகம், யாழ். பல்கலைக்கழகம்.

## கல்லூரிக்கு பெருமை-புகழ்

தென்னிந்தியத் திருச்சபையின் புதிய ஆயராக நியமிக்கப்பட்டிருக்கும் அதி வணக்கத்திற்குரிய கலாநிதி எஸ். ஜெபநேசனை வாழ்த்துவதில் யாழ்ப்பாணக் கல்லூரி குடும்பத்தினர் பெருமையடைகிறோம். கல்லூரி அதிபராக இருந்து, ஆயராகப் பதவியேற்றது நமது கல்லூரிக்கு பெருமையாகும். அவர் எமக்கு பெரும் புகழும் தந்திருக்கிறார்.

சாதாரண குடும்பத்திலே பிறந்து உன்னத விழுமியங்களை சிறுவயது தொடக்கம் ஆசிரிய, தேவ ஊழிய பெற்றோரால் ஊட்டி வளர்க்கப்பட்டு வாழ்க்கையில் தன்னுடைய முயற்சியினால் உன்னத நிலையை அடைந்தவர் ''நன்னிலைக் கண் தன்னை நிறுப்பானும் தன்னை மேன் மேல் உயத்தி நிறுப்பானும்………… தன்னைத் தலையாக கொள்வானும் அவனேதான்'' என்ற நாலடியாரின் வாக்குக்கேற்ப வாழ்ந்தவர்.

இவருடைய பெற்றோர் காரைநகரையும் சாவகச்சேரியையும் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். இவருக்கு ஐந்து சகோதரர். மூவர் பெற்றைப் போல தேவ ஊழியத்தில் ஈடுபட்டுள்ளனர். இன்னுமொருவர் வைத்திய சேவையில் ஈடுபட்டு சேவை செய்து மறுமைக்குள் பிரவேசித்தார்.

கலாநிதி எஸ். ஜெபநேசன் ஓர் சிறந்த பேச்சாளன், எழுத்தாளன், கவிஞன், நடமாடும் பல்கலைக்கழகம், ஆழ்ந்த அறிவும், தெளிந்த புத்தியும். தீர்க்கதரிசனமும் மகாத்மா காந்தியின் சுதந்திர வேட்கையும் பாரதியாரின்இன உணர்வும்; பவுல் அடியாரின் திருப்பணி வேட்கையும் கொண்டவர். கிறிஸ்தவ சமயமும். செந்தமிழும் இணைந்து வாழ அரும்பாடுபட்டவர். தமிழ் மக்களின் அடக்குமுறை கண்டு கொதித்தெழுந்தவர். மக்கள் சேவையே மகேசன் சேவை என்று வறியவர்கள், ஊனமுற்றோர், உடைமைகளை இழந்தோர், உறவினரை இழந்தோர் ஆகியோரின் துயர் துடைக்கும் பணியில் தன்னை அர்ப்பணம் செய்துள்ளார்.

இவர் தம்முடைய மந்தையை ஓர் இக்கட்டான காலகட்டத்தில் வழி நடத்தும் பொறுப்பை ஏற்றுள்ளார். கடவுள் தாமே இவரை பலப்படுத்தி வழிநடத்தி ஆட்கொள்ள வேண்டுமென பிரார்த்திக்கிறோம்.

G. இராஜநாயகம்,
உப அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி.

## சேவை மேலும் சிறக்கட்டும்

பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள் எமது அங்கத்துவ நிறுவனங்களின் ஒன்றான தென்னிந்திய திருச்சபையின் புதிய யாழ். அத்தியட்சகராக திருநிலைப்படுத்தப்படும் இத்திருநாளில் யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய அங்கத்துவ நிறுவனங்கள் தமது மனமார்ந்த ஆசியைத் தெரிவித்துக் கொள்கின்றனர். மேலும் இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் தமது சபையினூடாக மனிதநேய நடவடிக்கைகளில் எம்முடன் இணைந்து செயலாற்றிவரும் தென்னிந்திய திருச்சபையின் சேவைகள் மென்மேலும் புதிய ஆயரின் வழிகாட்டலில் சிறப்புற அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கிறோம்.

அங்கத்துவ நிறுவனங்கள்
அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்
யாழ். மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பழைய றலி சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: வே. செல்லத்துரை, நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை.

(26039)

---

பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. பூச்சி நீக்கியவை. இரண்டு மாதம் நிரம்பியவை. இல. 9, பிளைச்சர் ஒழுங்கை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அருகில், சுண்டிக்குளி.

(6249)

---

பாடசாலை அலுவலக உபகரணங்களை பெற்றுக் கொள்ள, சுரேகா புத்தகக் களஞ்சியம், இல. 25, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

(6250)

## விற்பனையாகிறது

15 காரணிக்கம் - செபமாலைத் தியானப் புத்தகத்துடன் செபமாலையும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன தொடர்பு கொள்ளவும்: ''ஆவே மரியா'' புனித சிந்தத்திரை மாதா இல்லம் இல. 92, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(26066)

## வெளிவந்துவிட்டது

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (S.L.A.S.) க. பொ. த. (உயர்தர) தேர்வுக்குரியது ஆக்கியோன்: D. Sam. கிடைக்கும் இடங்கள்: புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் (யாழ்.), ஸ்ஃபாரிஸ், சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில், பாரதி கல்வி நிலையம், சித்தன்கேணி.

(26051)

## தேவை

எலக்ரோனிக் தொழில்நுட்ப வேலைகள் பழக விரும்புவர்களும், வீடியோ படப்பிடிப்பு, பாடல் பதிவு, T. V. Radio திருத்துவதிலும் தொழில் தெரிந்தவர்களும், பழகவிரும்புவர்களும் நேரில் விண்ணப்பிக்கவும். முன்பு விண்ணப்பித்தவர்களும் தொடர்பு கொள்ளவும்: நியூ விக்ரேஸ் எலக்ரோனிக் கொம்பிளெக்ஸ், B. M. C. ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(6251)

## புதிய வெளியீடு

பாடசாலை மேடைகளில் உங்கள் குழந்தைகள் பேச்சாளராக வேண்டாமா? பாலர் பிரிவிலிருந்து ஐந்தாம் ஆண்டு வரை மாணவர்களுக்கான பேச்சுக்கள், கட்டுரைகளாகவும் உதவும். ''என்னாலும் பேச முடியும்'' ஆசிரியர் 'கோட்பாய் சிவம்''.

(26031)

## பயிற்சி வினாத்தாள்கள்

புலமைப் பரிசில் வினாத்தாள்கள் விடைகளுடன் ஒவ்வொரு வாரமும் விற்பனையாகின்றன. விலை ரூபா 10. மங்களா கல்விச் சேவை வெளியீடான இவை கிடைக்கும் இடங்கள்: பூபாலசிங்கம், மக்மிலன், ஸ்ரீலங்கா, மது, கொக்குவில்.

(5950)

## இடமாற்றம்

இதுவரை காலமாக 32, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த புனிதா நகை மாளிகை 04-06-1993 முதல் 239, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(6245)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

O/L இறுதிப் பிரிவு DAY CLASSES

ஆரம்பம்: 12 - 06 - 1993 (இன்று) 11-15 மணி

● அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

(சி-5310)

---

அரியாலை சனசமூக நிலைய

# 44ஆவது ஆண்டு நிறைவு விழா

இன்று 12 — 06 — 1993 சனிக்கிழமை

பி. ப. 2-00 மணிமுதல்:

இல்ல மெய்வல்லுனர் போட்டிகள்

இரவு 9-00 மணி:

## ராஜன்ஸ் இசைக் குழுவினரின்

## ★ புதிய வார்ப்புக்கள் ★

முற்றிலும் இலவசம்

நிர்வாகம்,
அ. ச. ச. நி., புங்கன்குளம்.

(36064)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## இசைக்கலைமணி, நாட்டியக்கலைமணி டிப்ளோமா/ இசைக்கலைமாணி, நாட்டியக்-கலைமாணி/ கைதடி சித்தமருத்துவப் பிரிவு ஆகிய பயிற்சி நெறிகளுக்கான 1992/93 ஆண்டிற்கான அனுமதி

மேற்குறிப்பிட்ட பயிற்சிநெறிகளுக்கான அனுமதிகள் தொடர்பாக செய்யப்பட்ட பத்திரிகை விளம்பரத்துடன் கீழ்வரும் மேலதிக தகவல்களையும் கவனத்திற் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

1. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 23 - 07 - 1993 வரை நீடிக்கப்பட்டுள்ளது
2. விண்ணப்பப் படிவங்கள் விவசாய பீடம் கிளிநொச்சி, இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி வவுனியா ஆகிய இடங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
3. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை விவசாயபீடத்திலும், இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி வவுனியாவிலும் சமர்ப்பிக்கலாம்.

பதிவாளர்.

(சி-5242)

---

# தென்னிந்திய திருச்சபை - யாழ். பேராயம்

## புதிய பேராயரைப் பதவியில் அமர்த்தும் நிகழ்வு

சென்னை தென்னிந்திய திருச்சபைப் பேராலயத்தில் 1993 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி தென்னிந்திய திருச்சபையின் புதிய ஆயராக அருட்பொழிவு பெற்ற பேராயர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் (B. A., Dip - in - Ed., M. A., B D., Ph. D) அவர்களை தென்னிந்தியத் திருச்சபை - யாழ் பேராயத்தின் மூன்றாவது பேராயராக பதவியில் அமர்த்தும் நிகழ்வு வழிபாடு ஜூன் மாதம் 12 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3-00 மணிக்கு பேராயர் டேவிட் ஜெயரட்ணம் அம்பலவாணர் அவர்களின் தலைமையில் வட்டுக்கோட்டை பேராலயத்தில் நடைபெறும் அதனைத் தொடர்ந்து புதிய பேராயருக்கு யாழ்ப்பாணக் கல்லூரி வளாகத்தில் வரவேற்பு நிகழ்வு ஒன்று இடம்பெறும்.

இந் நிகழ்வுகளில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கப்படுகின்றீர்கள்.

அ. அ. போல்,
செயலாளர்,
தென்னிந்தியத் திருச்சபை யாழ். பேராயம்.

(சி-5240)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| மண்ணில்! | விண்ணில்! |
|---|---|
| 08 | 13 |
| — | — |
| 03 | 05 |
| — | — |
| 1939 | 1993 |

## அமரர் இராசதுரை சடாட்சரம்

(உரிமையாளர்-வீனஸ் தங்கமாளிகை, யாழ்ப்பாணம்)

ஆவியோ நிலையில் கலங்கிட யாக்கை
அகத்ததோ புறத்ததோ அறியோம்
பாவி நாம் நெஞ்சம் பதறிடத் துடித்து
படுந்துயர் நீங்கிட வரிதே
சாவிலே யின்பம் நிஜமென்று வாழ்வை
சட்டென நீத்துநீர் சென்றீர்
கூவிநாம் அழைப்போம் குடும்பத்தில் இன்னும்
குழந்தையாய் பிறந்து நீர் வருக!

அன்னாரின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (12 - 06 - 93) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்வில் தாங்களும் வருகை தந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.

மாசிவன்,
நீர்வேலி வடக்கு.

(26054)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 25 | 15 |
| — | — |
| 09 | 05 |
| — | — |
| 1895 | 1993 |

அமரர்

## முருகப்பர் அம்பலவாணபிள்ளை பொன்னையா

''மறந்தாலும் பிறந்தாலும் மாண்டாலும் இருந்தாலும்
மறவாத தெய்வமெடி — தங்கமே!
மற்றொன்று மஞ்சாதேயேடி.''
''ஒரு பொல்லாப்புமில்லை, எப்பவோ முடிந்த காரியம்,
நாமறியோம், முழுதும் உண்மை.''
(யோக சுவாமிகள் அருள் வாக்கு)

★ ★ ★

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பிவைத்தோருக்கும் பல்வேறு வழிகளில் உதவியும் ஒத்தாசையும் புரிந்தோருக்கும், எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

★ ★ ★

14-06 1993 [திங்கட்கிழமை] இல் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள கிருத்தியத்திலும் கலந்துகொண்டு, மதியபோசனத்திலும் பங்கு பற்றிச் செல்லுமாறு, உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோரை அன்புடன் அழைக்கின்றேன்.

பொ. மாணிக்கவாசகர் (மகன்),
— முன்னைனாள் உதவி விவசாய அதிபர், பயிர் பாதுகாப்பு—

'பொன் வயல்''
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(25990)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தவறுகள் திருத்தப்பட வேண்டும்

ஈழத்துச் சஞ்சிகைகள், நூல்கள், சிற்பங்கள், ஓவியங்கள், புகைப்படங்கள், சித்த மருத்துவம் ஆகிய துறைகள் சார்ந்த கண்காட்சி கடந்த வார இறுதியில் மூன்று தினங்கள் நகரில் நடைபெற்றது. இக் கண்காட்சி, சம்பந்தப்பட்ட துறைகளில் ஈழத் தமிழர்கள் ஈட்டிய வளர்ச்சியை மதிப்பிடுவதற்கும், இருப்பு எடுப்பதற்கும் உதவியது எனலாம். அத்தோடு இன்றைய சந்ததியினருக்கு—மாணவர்களுக்கு— பழைய சந்ததியினரை, அவர்களின் திறமைகளை அறிமுகப்படுத்தவும் உதவிற்று.

புதிய சந்ததியினருக்குப் பழைய பரம்பரையையும், அவர்களின் படைப்புகளையும், சாதனைகளையும் அறிமுகப்படுத்துவதற்கு ஆவணப்படுத்தலும் அவற்றைப் பாதுகாத்தலும் மிக முக்கியமாகும். இன்றைய நிகழ்வுகளையும், மாற்றங்களையும் இப்போது பதிந்தும், ஆவணப்படுத்தியும் பாதுகாக்காவிடில் நாளைய சந்ததியினர் அவற்றை அறிந்து கொள்ள முடியாமற் போகும்.

தமிழர்களைப் பொறுத்த வரையில் அவ்வப்போது நடைபெறும் நிகழ்வுகள் மற்றும் மாற்றங்களைப் பதிந்து கொள்ளும் பணியில் உரிய கவனம் செலுத்தப்படுவதில்லை. இந்தக் குறைபாடு— தவறு— இன்னமும் நீக்கப்படவுமில்லை. நூல்கள், சஞ்சிகைகள் மட்டுமன்றி மனித வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட எல்லாத் துறைகளிலும் பதிவுகளும், ஆவணப்படுத்தலும் அவசியம்.

இதே போல உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சுந்தரம் டிவகலாலா சுட்டிக் காட்டிய இன்னொரு பெரிய குறைபாடும் — தவறும் — நாம் எல்லோரும் சேர்ந்து செய்து வரும் குற்றமாகும். ஆம். வீடுகள் தோறும் ஒரு நூல் நிலையத்தை அவரவர் இயல்புக்கு ஏற்பவேனும் உண்டாக்கிப் பேணும் பழக்கம் நம்மிற் பலரிடமும் இல்லை என்பதை அவர் கவலையுடன் சுட்டிக்காட்டி உள்ளார்.

கல்வியே கருந்தனம் என்கிறோம். வாசிப்பு ஒரு மனிதனைப் பூரணமாக்குகிறது என்கிறோம். நூல்களும் அவை தரும் அறிவுமே நிரந்தர சொத்துக்கள் என்கிறோம். ஆனால் வீடுகளில் சிறிய அளவிலான நூல் நிலையங்களை அமைத்துக் கொள்வதில் அக்கறை கொள்வதில்லை. வீட்டுக்குவீடு நூல்நிலையம் பெறற்கரிய பெரும் சமூகச் சொத்து.

கண்காட்சி விழாவில் யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் தெரிவித்த குறைபாடும் இங்கே கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். ஈழத்தில் கடந்த காலத்தில் வெளியிடப்பட்ட நூல்களை வாங்குவதற்குப் பொதுவான ஒரு குறிப்பிட்ட மத்திய விற்பனை நிலையம்— அதாவது நிறுவனப்படுத்தப்பட்ட விற்பனை நிலையம் — இல்லை என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இங்கே வெளியிடப்பட்ட நூல்களின் வழிகாட்டி அட்டவணைகள் (Catalogue) இல்லை என்பது நாம் எந்தளவுக்கு இத்துறைகளில் பின்னால் நிற்கிறோம் என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு!

அறிவு, இலக்கியம், கலைகள், பண்பாடு என்பன வளர்வதற்கு பதிவு செய்தல், ஆவணப்படுத்தல், விற்பனை செய்தல், சேகரித்து நூல் நிலையங்கள் உண்டாக்குதல் என்பன மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை எல்லாவற்றிலும் பின்னடைவு கண்டுள்ள ஈழத்தமிழர்கள், இவ் விடயங்களில் தமது கவனத்தையும் கருத்தையும் செலுத்த வேண்டிய வேளை வந்துவிட்டது. இதுவரை இழைத்த தவறுகள் திருத்தப்பட வேண்டும்.

## அந்தோனியார் திருவிழா

புகழ் பெற்ற பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை (ஞாயிற்றுக்கிழமை) சிறப்பாக நடைபெற இருக்கிறது.

இன்று மாலை 4-30மணிக்கு சற்பிரசாத ஆராதனை சுற்றுப்பிரகாரம் ஆகியன நடைபெறும்.

நாளை 4 மணிக்கும் 5.30 மணிக்கும் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும்.

காலை 7 மணிக்கு யாழ். ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி நடைபெற்று அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி ஆசீர்வாதங்களுடன் வருடாந்த திருநாள் கொண்டாட்டங்கள் நிறைவு பெறுமென பங்குத்தந்தை வண. செயமாலை தூரம் அடிகள் தெரிவித்தார். (ஓ-51)

o o o

கிளாலி புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த நவநாள் உற்சவம் கடந்த 4 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இன்று மாலை திருநற்கருணை ஆராதனையும் திருப்பலிப் பூசையும் இடம்பெற்று, நாளை காலை திருநாட்பாடல் பலிபூசையும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

நாளை இரவு கிளாலி சென். அந்தனிஸ் நாடக குழுவினரின் ''புனித அந்தோனியார்'' என்னும் வரலாற்று நாடகம் இடம்பெறும். (உ-117)

o o o

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். காலை 7 மணிக்கு திருச்சொரூப பவனி, திருச்சொரூப ஆசீர்வாதம் இடம்பெறும். தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும்.

மாலை கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். ஒளி என்ற சமூகநாடக நிகழ்ச்சியும் நடைபெறும்.

இதேவேளை—

சுன்னாகம் அந்தோனியார் ஆலயத்தின் 150ஆவது ஆண்டு நிறைவு விழா ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகிறது

சுன்னாகம் அந்தோனியார் கோவில் முன்பாக கந்தரோடை வீதியில் புனித அந்தோனியார் சொரூபம் இன்று திரைநீக்கம் செய்து வைக்கப்படும்.

யாழ். ஆயர் அதிவணக்கத்திற்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சொரூபத்தை திரைநீக்கம் செய்து வைப்பார். (ஓ-15)

## விளையாட்டு நிகழ்வுகள்

சிறுவர், இளைஞர் கழகங்கள் மற்றும் இடம்பெயர்ந்தோர் முகாம்கள் ஆகியவற்றுக்கு இடையில் றெட்பானா நிறுவன ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் மெய்வல்லுநர் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்றும் நாளையும் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

றெட்பானா திட்ட இணைப்பாளர் திரு அ. சத்தியோயாத சர்மா தலைமையில் நாளை பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும் இறுதி நிகழ்வுகளில் கோப்பாய் உதவி அரச அதிபர் திரு. க. கனகரத்தினம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. அ. மகாலிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

o o o

பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:

17 வயதுப் பிரிவு

★ காலை 8. 30 மணி:- யாழ் இந்து எதிர் சென் ஜோன்ஸ் — யாழ். இந்து மைதானத்தில்.

★ காலை 8. 30 மணி:- மானிப்பாய் இந்து எதிர் ஹாட்லி— மானிப்பாய் இந்து மைதானத்தில்

★ காலை 9. 00 மணி:- சென்பற்றிக்ஸ் எதிர் யாழ். மத்திய கல்லூரி — சென்பற்றிக்ஸ் மைதானத்தில்

15 வயதுப் பிரிவு

★ காலை 9 00 மணி:- யாழ். மத்திய கல்லூரி எதிர் சென்பற்றிக்ஸ் — யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில்

o o o

''உதயன்'' நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். பல்கலைக் கழகம் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக் கழக ஆடு களத்தில் நடைபெறும் ஆட்டத்தில் ஜொனி பன்ஸ் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி மோதும்.

o o o

கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் ''கே.வி.வி.'' கிண்ணத்திற்காக நடத்திவரும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் நாளை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன. பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:

காலை 8. 30 மணி:- ஷப்றா அணி எதிர் கிறாஸ்கொப்பர்ஸ் அணி.

★ பிற்பகல் 1. 30 மணி:- சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி எதிர் யாழ். பல்கலைக் கழக அணி.

o o o

யாழ். மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம் கொண்டாவில் குமரன் மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3. 30 மணி:- யாழ். பாரதி எதிர் ஆனைக் கோட்டை அறிவொளி.

★ 4. 30 மணி:- ஊரெழு றோயல் ''ஏ'' எதிர் மயிலங்காடு ஸ்ரீ முருகன். (உ)

## அதிபர்களுக்கு அழைப்பு

யாழ் கோட்ட பாடசாலைகளில் கடமை நிறைவேற்றும் அதிபர்களாக பணிபுரிபவர்கள் மற்றும் அதிப பதவியின் கடமைகளைக் கவனிப்பவர்கள் ஆகியோரை நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு யாழ். கோட்டத்திற்கு சமுகமளிக்குமாறு உதவிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஓ)

## சுகாதார வார நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ். மாநகர சபை சுகாதார எழுச்சி வாரத்தை ஒட்டி இன்று யாழ். மாநகர சபை எல்லைக்குள் பல்வேறு இடங்களிலும் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம், திருக்குடும்ப ஆங்கிலப் பாடசாலை, சென். பெனடிக்ற் பாடசாலை, கணேசன் தோட்டம் இடம்பெயர்ந்தோர் முகாம், சன்மார்க்க வித்தியாலயம், சென் நிக்கலஸ் பாடசாலை ஆகிய இடங்களில் சுகாதார கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளன.

புனித மரியாள் பாடசாலையில் பேச்சு, கட்டுரை பொது அறிவு சம்பந்தமான போட்டிகளும் நடைபெறும்.

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் இன்று காலை 8.30 மணி முதல் 1 மணி வரை சிறப்பு நிகழ்ச்சிகள் பலவும் இடம்பெறவுள்ளன. (உ-5-30)

## அராலி கண்ணிவெடி விசாரணை:

# பிரிட்டிஷ் குண்டு நிபுணர் கொழும்பு வரமாட்டார்!

கொழும்பு, ஜூன் 12

அராலி நிலக்கண்ணிவெடித் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கொமன்வெல்த் விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளிக்க பிரிட்டிஷ் வெடிகுண்டு நிபுணர் ஜோன் வியற் என்பவரை அழைப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வி கண்டுவிட்டன.

நாடாளுமன்ற விவகார அமைச்சர் டாக்டர் விமல் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் இத்தகவலை வெளியிட்டார்.

இலங்கைக்கு வருவதற்குச் சகல வசதிகளும் அளிக்கப்படும் என்று அவருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவரை அழைக்க எடுத்த முயற்சி வெற்றி பெறவில்லை என்றும் அவர் கூறினார்.

இதனை அடுத்து திரு வியற்றின் சாட்சியத்தைப் பதிவு செய்வதற்காக கொமன்வெல்த் விசாரணை ஆணைக் குழுவை லண்டனுக்கு அனுப்பி வைக்க அரசு தீர்மானித்துள்ளது.

திருமதி லலி கொப்பேகடுவ,

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பண்டிதமணி நினைவாக கட்டுரை, பேச்சுப் போட்டி

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் தொண்ணூற்று நான்காவது பிறந்த தினத்தையொட்டிப் பாடசாலை மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி இன்று சனிக்கிழமை முற்பகல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. நாளை ஞாயிறு முற்பகல் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் கட்டுரைப் போட்டி இடம்பெறுகின்றது.

இப்போட்டிகளில் பங்குபற்றித் தெரிவுசெய்யப்படுபவர்களுக்கான பதக்கங்கள், பரிசில்கள், சான்றுப்பத்திரங்கள் பண்டிதமணியின் பிறந்த தினமான 27-06-93 ஞாயிறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கைலாசபதி அரங்கில் இடம்பெறவுள்ள விழாவில் வழங்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபை இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகிறது. [க]

## மணி விழா மங்களம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ். கல்வித்திணைக்கள இளைப்பாறிய அலுவலக உதவியாளர் திரு செ. துரைசிங்கம் அவர்களின் மணிவிழா மங்களம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நல்லூர் பரி. யாக்கோபு ஆலய சபை மண்டபத்தில் யாழ். கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் தலைமையில் நடைபெறும். (க)

## இன்று

அரியாலை சனசமூக நிலையத்தின் 44 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று பிற்பகல் 2 மணி முதல் நிலையத்தில் நடைபெறும்.

முதலில் ஆரம்பமாகும் மெய்வல்லுநர் போட்டிகளுக்கு நிலையத்தின் முன்னாள் தலைவரும் செயலாளருமான திரு. எஸ். கே. சண்முகலிங்கம் மற்றும் திருமதி சண்முகலிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பிப்பர். தமிழீழ விடுதலைப் புலிகளின் அரியாலை பிரதேச பொறுப்பாளர் திரு. பா. மாவி கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்வார்.

கழகங்களுக்கு இடையிலான அஞ்சலோட்டம், மாறுவேடப் போட்டி ஆகியவையும் —

தொடர்ந்து இரவு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (உ)

o o o

ஈச்சமோட்டை ஸ்ரீ ஞான வைரவர் இந்து இளைஞர் மன்றத்தினர் இன்று ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் சிரமதானப் பணிகளில் ஈடுபடவுள்ளனர். (க-17)

## பாடசாலைகளில்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் 157ஆவது ஆண்டு நிறைவு தினம், மலர் வெளியீடு, பரிசளிப்பு விழா ஆகியன இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அதிபர் திரு. அ. மு. அருணாசலம் தலைமையில் நடைபெறும்.

யாழ் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இரவு 8 மணிக்கு கலை நிகழ்ச்சிகள், நாடகம் ஆகியன இடம்பெறும். [க-90]

o o o

ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலய பரிசளிப்பு விழாவும், பெற்றார் தின விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திரு. முத்துக்குமாரசுவாமி தலைமையில் நடைபெறும். [க-155]

## விலை உயர்ந்தது

கொழும்பு, ஜூன் 12

தென்னிலங்கையில் மண்எண்ணெயின் விலை நேற்று முதல் அதிகரிக்கப்பட்டது. இதுவரை லீற்றர் 8ரூபா 80 சதமாக விற்கப்பட்ட மண்எண்ணெய் நேற்று முதல் மூன்று ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 11 ரூபா 80 சதமாக விற்பனை செய்யப்பட்டது. சில்லறை விலை போக்குவரத்துத் தூரத்துக்கு ஏற்ப சிறிது அதிகமாக இருக்கும். (அ-எ)

## ஆலயங்களில்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த இலட்சார்ச்சனை விழா நாளை ஞாயிறு தொடக்கம் 22 ஆம் திகதி வரை நடைபெறும்.

சதுர்த்தித் தினமான 23 ஆம் திகதி புதன்கிழமை கணபதிஹோமம் நடைபெற்று, மாலை ஸ்ரீபஞ்சமுக விநாயகர் வீதியுலா வருவார். (ஓ)

o o o

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீஞான வீரபத்திரர் தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

உற்சவ தினங்களில் தினசரி இரவு 7 மணி தொடக்கம் 8 மணிவரை அகில இலங்கை கம்பன் கழகத் தலைவர் திரு. தி. திருநந்தகுமார் ''கம்பராமாயணம்'' பற்றி தொடர் விரிவுரை நிகழ்த்துவார். (க-117)

o o o

ஏழாலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் அருள் உலா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி மதியம் மடாலயப் பிள்ளையார் கோவிலில் இளைப்பாறி மீண்டும் மாலை நேரத்தில் நடைபெறும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அம்பாளுக்கு சங்காபிஷேகத்துடன், அன்னதானமும் இடம்பெறும். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிறிபேக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## வாழ்த்துகின்றது

யாழ் தென் இந்திய திருச்சபை
பேராயராக திருநிலைப்படுத்தப்படவுள்ள
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின்
பழைய மாணவர்
அதிவணக்கத்திற்குரிய

### கலாநிதி. சு. ஜெபநேசன்

அவர்களை
மேற்படி கல்லூரியின்
பழைய மாணவர் சங்கம் வாழ்த்துகின்றது.

(26075)

## மரண அறிவித்தல்கள்

### பார்வதிப்பிள்ளை சுப்பிரமணியம்

காரைநகர் பாலாவோடையைச் சேர்ந்தவரும், 17/4, ஐயனார் கோவிலடி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற அப்போதிக்கரி சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியுமான பார்வதிப்பிள்ளை காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி குணமதி மாரிமுத்து, காலஞ்சென்ற தியாகராஜா (முதலியார்), புஷ்பராஜா (உருக்குக் கூட்டுத்தாபனம், கொழும்பு), பற்குணராஜா (R. M. P. பரசங்கவேவ), மகேந்திரராஜா (R. M. P கொழும்பு), மனோகரராஜா (கனடா), திருமதி ரவீந்திரமணி கனகரட்ணம் ஆகியோரின் அருமைத் தாயாரும், மாரிமுத்து (இளைப்பாறிய R D O), காலஞ்சென்ற மகேஸ்வரி, யோகேஸ்வரி, வசந்தாதேவி, கனகரட்ணம், இந்திராதேவி ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-06-1993 நேற்று கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெற்றன.

தகவல்:
திருமதி ரவீந்திரமணி கனகரட்ணம் (மகள்)
மருமக்கள்
17/4, ஐயனார் கோவிலடி,
வண்ணார்பண்ணை.

(26072)

### லூயிஸ் விக்ரர்

(இளைப்பாறிய சுங்க இலாகா உத்தியோகத்தர்)

யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட லூயிஸ் விக்ரர் 11 - 6 - 93 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற திரேசம்மாவின் அன்புக் கணவரும் திருமதி யோசேப் பிறிச்சேட்டின் அன்புத் தந்தையும், T. S. யோசேப் ஆசிரியர் (South Africa) (முன்னாள் ஆசிரியர் புனித அந்தோனியார் பாடசாலை ஊர்காவற்றுறை) அவர்களின் அன்பு மாமனாரும், J. பெபிங்ரன் (சணா] (South Africa), J. கிளின்ரன் (சனி] (Canada), J. லின்டா லொறெயின் [டோட்டி] (Canada) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12 - 6 - 93) சனிக்கிழமை காலை 9 மணிக்கு அவரது 79, 4 ஆம் குறுக்கு வீதி, குருநகர் இல்லத்தில் இருந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி யோசேப் பிறிச்சேட் (மகள்)
79, 4 ஆம் குறுக்கு வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

(26070)

### கந்தையா நடேசு

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தையா நடேசு 06-06 93 அன்று புங்குடுதீவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா – வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், கருணாமூர்த்தி (சுவிஸ்), பிரேமலதா (கனடா), புஸ்பலதா (சுவிஸ்), சசிலதா (சுவிஸ்), கேமலதா, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சச்சிதானந்தன் (கனடா, சந்திரசூரியன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சயிதா (கனடா), கிவிசா (கனடா), சபிதா (சுவிஸ்), சாதனா (சுவிஸ்) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற கார்த்திகேசு, சிதம்பரம் ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மாரிமுத்து, காலஞ்சென்ற ராசம், செல்லம்மா, சின்னம்மா, லெட்சுமி, பராசக்தி, பொன்னம்மா, தம்பிராசா, நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், பொன்னுத்துரை, காலஞ்சென்ற தம்பையா, நடராசா, செல்லத்துரை, காலஞ்சென்ற அரியரெட்ணம், காலஞ்சென்ற கனகசபை, காலஞ்சென்ற நடராசா, துரைராசா, காலஞ்சென்ற சுப்பிரமணியம், வில்வரெட்ணம் நிர்மலானந்தராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் புங்குடுதீவு மணற்காட்டு மயானத்தில் 8-6-93 அன்று நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;
ந. மனோன்மணி (மனைவி)
45, அன்ன சத்திர ஒழுங்கை,
பலாலி றோட்,
யாழ்ப்பாணம்.

(26076)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 12 - 06 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# முகாம்களை விட்டு ஈழ அகதிகள் இரவில் வெளியே வருவதற்குத் தடை!

## தமிழக அரசு உத்தரவு

சென்னை, ஜூன் 12

தமிழ் நாட்டில் அகதிமுகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் இரவு நேரங்களில் முகாம்களை விட்டு வெளியேறக்கூடாது என்றும்–

அரசு சார்பற்ற நிவாரண உதவி நிறுவனங்களைச் சேர்ந்தோர் அகதி முகாம்களில் தொண்டாற்றக் கூடாது என்றும் மாநில அரசு தடை செய்துள்ளது.

முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை அவர்களின் தாயகத்திற்கு திருப்பி அனுப்புவதற்கு இந்திய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று என பி. பி ஸி. செய்தியாளர் குறிப்பிட்டார்,

தமிழ் நாட்டில் 131 முகாம்களில் இலங்கை தமிழ் அகதிகள் தங்கியுள்ளனர்.

மாநில அரசு தடை உத்தரவு விதித்ததற்கான காரணங்கள் கூறப்படவில்லை.

இனிமேல் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரைதான் அகதிகள் முகாம்களை விட்டு வெளியே செல்ல முடியும்.

இந்த அகதிகளில் 30 ஆயிரம் பேர் விவசாயக் கூலிகளாகவோ அல்லது ரயில் துறை சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களின் தற்காலிக தொழிலாளர்களாகவோ பணியாற்றி வருகின்றார்கள்.

இவர்களை தற்போதைய குறிப்பிட்ட நேர ஊரடங்கு விதி பெரிதும் பாதிக்கும்.

அரசு சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த தொண்டர்கள் முகாம்களில் பணிபுரியத் தடை விதிக்கும் உத்தரவு அடுத்த சில வாரங்களில் எல்லா முகாம்களிலும் அமுல் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் அகதிகளை திருப்பிச் செலலும் திட்டத்துக்கு அவர்களை இணங்கவைக்க —அது தொடர்பான படிவங்களில் கையொப்பமிட வைக்க — மேற்கொள்ளப்படும் இயக்கத்தின் ஒரு பகுதியாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்று சர்வதேச அகதிகள் அமைப்புகள் கவலை வெளியிட்டன.

இந்த ''இணங்க வைக்கும் இயக்கமே'' அகதிகளை திருப்பி அனுப்பும் திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு முயற்சி என்றும் அந்த அமைப்புகள் கருதுகின்றன.

(உ-எ)

### பீரங்கிப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

10 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

அன்று காலைமுதல் அந்தப் படகில் இருந்து செம்மலை, நாயாறு பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் மீது கடும் பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் அப்பகுதிகளில் பதற்றம் ஏற்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அங்கு விரைந்து வந்த தமிழீழ துணைப்படையினர் பீரங்கிப் படகு மீது சுமார் அரைமணி நேரம் கடும் தாக்குதல் நடத்தி அதனை விரட்டினர் என்று தெரிவிக்கப்பட்டது.

### கைது செய்யும்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டிருக்கிறது.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் நடந்த மாநாடு ஒன்றில் ஆராயப்பட்டது. அந்த மாநாட்டிலேயே மேற்படி முடிவு மேற்கொள்ளப்பட்டது.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இம்மாநாட்டில் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

கொழும்பில் விடுதிகளிலும் வீடுகளிலும் தங்கியிருப்பவர்கள் பற்றிய விவரங்களைச் சேகரிப்பதற்கு தற்போது பயன்படுத்தப்படும் படிவத்தை வேறு விதமாக அச்சிடுவது என்றும் அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

[உ-எ]

### பிரிட்டிஷ்...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி விமலரத்னா ஆகியோரின் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணிகள் இருவரையும் அரச செலவில் லண்டனுக்கு அனுப்பிவைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சட்டத்தரணிகள் இருவரும் லண்டன் செல்வதற்கான விமானப் பயணக் கட்டணத்தை அரசாங்கம் வழங்கும் என்றும் அவர் கூறினார்.

சுதந்திரக் கட்சி எம். பி. நிமால் சிறிபால டி சில்வா எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் இத்தகவல்களை வெளியிட்டார்.

இதற்கிடையில்—

ஆணைக்குழு உறுப்பினர்கள் நேற்று ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தனர்.

[illegible] நடவடிக்கைகளுக்காக அவர்கள் லண்டன் பயணமாவார்கள்.

[உ-எ]

## ப. நோ. கூ. சங்கம் மூலம் 2 கிலோ சீனி விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

குடாநாட்டில் உள்ள குடும்பங்களுக்கு 2 கிலோ வீதம் கட்டுப்பாட்டு விலையில் சீனி வழங்க யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதி நடவடிக்கை எடுத்துள்ளது.

'குமாரி' கப்பலில் கூடிய அளவு சீனி எடுத்துவரப்பட்டுள்ளதை அடுத்தே ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் உடனடியாக சீனியை விநியோகிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ப. நோ. கூ. சங்கங்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட சீனியை கடன் அடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம் என்றும்—

உடனடியாக தமக்கு ஒதுக்கப்பட்ட சீனியை பொறுப்பேற்று விநியோகிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் வெளிச் சந்தையில் சீனிக்கு ஓரளவு தட்டுப்பாடும், விலை அதிகரிப்பும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

(ஒ 5)

### கிழக்கில் சர்வசன...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரக் கட்சியும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் நாடாளுமன்றத் தெரிவுக்குழு நேற்று முன் தினம் கூடியது. இந்தக் கூட்டத்தைத் தமிழ், முஸ்லிம் கட்சிகள் பகிஷ்கரித்தன.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அதிகாரத்தைப் பரவலாக்குவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். ஆனால் அதிகாரப் பரவல் அல்லாத வடக்கு - கிழக்கு சேர்ந்து அமைய வேண்டுமா அல்லது தனித்தனியாக அமையவேண்டுமா என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது.

இது குறித்து ஒரு முடிவுக்கு வருவதற்கு கிழக்கு மாகாண மக்களின் கருத்தை அறியும் பொருட்டு சர்வசன வாக்கெடுப்பை நடத்துவதே உகந்தவழி என்று தெரிவுக்குழு கருதுகிறதாம். அதனாலேயே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக குழுவுடன் நெருங்கிய வட்டாரங்கள் தகவல் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

தெரிவுக் குழுவின் அடுத்த கூட்டத்திற்கு பாதுகாப்புத் துறை அதிகாரிகளையும், தேர்தல் ஆணையாளரையும் அழைத்து, நான்கு மாதங்களுக்குள் கிழக்கில் சர்வசனவாக்கெடுப்பை நடத்துவதற்கான சூழலை உருவாக்குமாறும், ஏற்பாடுகளைச் செய்யுமாறும் கேட்பதற்கும் தெரிவுக் குழு முடிவு செய்திருக்கிறது.

1987 ஜூலை 29 இல் கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய [ராஜீவ் - ஜே, ஆர்.] ஒப்பந்தத்தில்—

வடக்கு - கிழக்கை தற்காலிகமாக இணைக்கவும்—

கிழக்கு வடக்குடன் இணைந்திருக்க வேண்டுமா என்பது குறித்து 1988 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிழக்கு மக்களிடையே சர்வசன வாக்கெடுப்பு மூலம் கருத்துக் கணிப்பு நடத்தவும்— ஏற்பாடாகியது.

ஆனால் கடந்த ஐந்து வருடங்களாக சர்வசன வாக்கெடுப்பு நடத்துவதை அரசாங்கம் காலத்துக்குக் காலம் ஒத்தி வைத்து வருகிறது.

(அ-6)

### கிளாலி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேத விவரங்கள் தெரியவரவில்லை. விடுதலைப் புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

கிளாலி ஊடான பயணிகள் போக்குவரத்து நள்ளிரவுக்குப் பின்னர் இடம்பெற்றதா என்பது பற்றி நேற்றிரவு இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

(ஒ-15)

### 'கடற் காற்று'...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விமானப் படையினர், கடற்படையினரின் உதவியுடன் இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் இந்த இராணுவ நடவடிக்கையின் போது சில பகுதிகளை தாங்கள் கைப்பற்றியுள்ளதாகவும் பிரிகேடியர் அல்கம மேலும் சொன்னார்..

(ஒ-எ-5-6)

யாழ். புனித அடைக்கல மரியாள் வி. க.
நடத்தும்

9 பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான

உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

இன்று ஆரம்பமாகவிருந்த இப்போட்டி 23—06—93 முதல் நடைபெறும் என அறிவிக்கிறோம். போட்டி நடைபெறும் ஆட்டவணை சம்பந்தப்பட்ட கழகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

—செயலாளர்

(26074)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org